**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 103 /2020 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஆண்டிச்சி | தந்தை/கணவர் பெயர்:அழகு | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2025

---

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>09.01.2025 மனுவின் பேரில் அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** நான் முதல் விசாரணை சாட்சியத்தில் எனது கணவர் அடிப்பட்டதை தெரிந்துகொண்டு சம்பவ இடத்திற்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து கால் மணி நேரத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடத்திற்கு நாங்கள் செல்லும் போது அங்கு 10, 15 நபர்கள் இருந்தார்கள். தகவல் தெரிந்து உலகம்பட்டி போலீசார் வந்து காயம் பட்ட எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனது கணவர் உடம்பில் வழிந்த இரத்தத்தை போலீசார் கொண்டு வந்த துண்டை கட்டி மருத்துவமனைக்கு போலீசார் வாகனத்திலேயே அழைத்து சென்றார்கள். நானும் போலீஸ் வாகனத்தில் சென்றேன். என்னுடன் வேறு யாரும் வரவில்லை. நானும் காயம்பட்ட எனது கணவர் மட்டும் சென்றோம். புதுக்கோட்டைமருத்துவமனைக்கு எங்களை உடனே அனுப்பி விட்டார்கள். அப்போது போலீசார் புகார் ஏதும் பெறவில்லை. புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு நான் என்னுடைய கணவருடன் செல்லவில்லை. புகார் மனுவை எனது பங்காளிகள் எழுதினார்கள். புகாரை புதுக்கோட்டையில் வைத்து எழுதி கொடுத்தோம். புகாரை எனது பங்காளி பையன் சட்டப்பிரிவுகள் எல்லாம் போட்டு எழுதிக்கொடுத்தார். அந்த புகாரில் என்ன எழுதி இருந்தது என்ற விபரம் தெரியாது. எனது கணவர் புகார் கொடுக்காமல் நான் கொடுத்தற்கு என்ன காரணம் என்றால் எனது கணவர் அடிபட்டி சிகிச்சை பெற்று

மயக்கத்தில் பேச முடியாமல் இருந்ததால் நான்  கொடுத்தேன். எனது கணவர் பேச முடியாத விபரத்தை நாங்கள் பார்த்து தெரிந்து கொண்டோம். எனக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் இடத்தில் 10 பேர் இருந்தார்கள். அவர்களை சாட்சியாக சேர்த்தேனா என்றால் 2, 3 நபர்களை சேர்த்து உள்ளேன். எனது கணவர் தடுமாறி விழுந்ததால் அவருக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகளை பழி வாங்க வேண்டி பொய் புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி எதும் தெரியாது என்றாலும் பங்காளி பையன் பொய்யாக தயார்செய்துகொடுத்த புகாரில் நான் ரேகை மட்டும் வைத்துள்ளேன் என்றாலும் புகாரின் சங்கதிகள் ஏதும் தெரியாது என்றால் சரியல்ல.  புகார் கொடுக்கும் போது என்னை தவிற வேறுயாரும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தசம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளால் எனது கணவருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.